## அரச நிதி[1]

அண்மை ஆண்டுகளில் வரவு செலவுத்திட்டக் கொள்கையின் முக்கிய குறிக்கோளாக விலை உறுதித் தன்மை இருந்து வருகின்றது. ஆகவே, வரவுசெலவுத் திட்டக் குறையைத் தாக்குப் பிடிக்கக்கூடிய மட்டத்திற்குள் வைத்திருப்பதை உறுதிப்படுத்துவதற்காகக் கிடைக்கத்தக்க மூலவளங்களுக்கமைவாக மொத்தச் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இதன் விளைவாக வரவுசெலவுத் திட்டக் குறை/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 1980 இன் 25 சதவீதம் கொண்ட விகிதத்திலிருந்து 1984 இல் 10 சதவீதத்திற்குப் படிப்படியாகக் குறைக்கப்பட்டது. வரவுசெலவுத் திட்டப் பற்றுக்குறை படிப்படியாகக் குறைக்கப்பட்டமையும், இறைமுகாமையில் ஏற்பட்ட பொதுவான முன்னேற்றமும் அண்மை ஆண்டுகளில் பணவீக்க வீதத்தினைக் குறைப்பதற்கு முக்கிய காரணிகளாக இருந்தன. பொதுவாக இக் குறிக்கோள் இருந்தபோதும் ஏற்றுமதி விலைகளில் ஏற்பட்ட கூடியளவு வீழ்ச் சியின் காரணமாக அரசிறை குறைவடைந்தமை, பாதுகாப்புடன் தொடர் புள்ள நடவடிக்கைகளின் மீதான உயர்ந்த செலவினம், பொதுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ஆகியன 1985 இன் வரவுசெலவுத் திட்டத் தொழிற் பாடுகளில் உயர்ந்த மூலவள இடைவெளியை ஏற்படுத்தின. இதன் விளைவாக, வரவுசெலவுத் திட்டத் தொழிற்பாடுகளில் தேறிய தாக்கம் சார்புரீதியில் உயர்ந் தளவு விரிவுத்தாக்கத்தினைக் கொண்டிருந்தது.

1985 இல் அரசநிதியின் செயலாற்றம் நாட்டின் இறை முறைகளின் அமைப்பு பலவீனங்களை எடுத்துக் காட்டியது. அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சி நிகழ்ச் சிப் படுத்தப்பட்ட செலவுகளை நிதியிடுவதற்குப் பண்ட ஏற்றுமதி வரிகளினையும் ஒருசில உறுதியான மாற்று அரசிறை மூலங்களினையும் பெருமளவிற்கு நம்பியுள் ளமையினால் தோன்றும் பலவீனமான தன்மையைக் கோடிட்டுக் காட்டியது. மறுபுறத்தில் செலவின அமைப்புச் செயலாற்றம், அரசிறைகளில் ஏற்படும் வீழ்ச்சி களுக்கேற்ப அரசின் செலவினத்தைச் சீராக்குவதில் ஏற்படும் குறுங்கால இடர்ப் பாடுகளை எடுத்துக் காட்டியது. வரவு செலவுத்திட்டச் செலவினத்தினைக் கட்டுப் படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் துணைநிரப்புச் செலவின ஒதுக் கங்கள் மற்றும் முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் ஊடான தேறிய கடன் வழங்கல்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்களினால் இம் முயற்சிகள் பயனற்றுப் போயின.

இவ்வாண்டின் பொருளாதார சூழ்நிலைகளின்கீழ் வரவுசெலவுத் திட்டப் பற்றுக்குறை தாக்குப்பிடிக்கத்தக்க மட்டத்திற்குள் அடையப்பட்டமை கடின மானதொரு பணியாக இருந்தபோதும், 1980 இல் காணப்பட்டது போன்ற மீண்டுமொரு பேரண்டப் பொருளியலின் உறுதியற்ற தன்மையினைத் தவிர்ப் பதற்கு விலை உறுதித் தன்மையின்மீது முக்கிய கவனம் செலுத்துவது இன்றி யமையாததாகும். பொருளாதாரத்தின் உற்பத்தித்துறைகளுக்கான மூலவளங்கள் கிடைக்கப்பெறாததன் காரணமாக நாணயக் கொள்கைமீது பெருமளவுக்கு நம் பிக்கை வைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

---

1 இப் பிரிவிலுள்ள ஆய்வுகள் 1985ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட விளைவுகளை அடிப்படையாகக் கொண்டது. இப்பிரிவில் பயன்படுத்தப்பட்டுள்ள எண்தொகைகள் மிகத் தற்காலிகமான வையாகும்.

**வரவுசெலவுத் திட்ட விளைவு**

1985 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடுகள் மொத்த அரசிறையான ரூ. 373,440 இலட்சங்களாக அமைந்து 1 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியை எடுத்துக்காட்டின. 1985 இல் அரசிறை/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 23 சதவீதமாக விளங்கி 1984 இல் நாடு அதன் ஏற்றுமதிப் பண்டங்களுக்கு மிக உயர்ந்த விதிவிலக்கான விலைகளைப் பெற்றபொழுது காணப்பட்ட உயர்ந்த வரி அரசிறை வீதத்தினைவிடச் சார்புரீதியில் குறைவான விகிதத்தை எடுத்துக் காட்டியது. எனினும் 1985 இல் அரசிறை/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 1980–1983 ஆம் ஆண்டுக் காலப் பகுதிகளுக்கிடையிலான சராசரி விகிதத்தினைவிடச் சார்புரீதியில் உயர்வாகவே விளங்கியது.

முற்பணக் கணக்கு வெளிக் கொடுப்பனவினை உள்ளடக்கிய மொத்த மீண்டெழும் செலவினத்தின் வளர்ச்சி 1985 இல் 12 சதவீதங்களாக விளங்கி 1984 இன் 21 சதவீதத்திலும் பார்க்க மெதுவான வளர்ச்சியைக் கொண்டிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான நடைமுறைச் செலவினத்தின் விகிதம் 1984 இன் 21 சதவீதத்திலிருந்து 1985 இல் 22 சதவீதத்திற்கு அதிகரித்தது. மீண்டெழும் கணக்குத் தொழிற்பாடுகளின் பொதுவான செயலாற்றம் 1984 இன் ரூ. 58,890 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 15,730 இலட்சம் கொண்ட மிகையை விளைவித்தது. 1985 இல் நடைமுறைக் கணக்கு மிகை வீழ்ச்சியடைந்தபோதும், 1981 ஆம் ஆண்டு தொடக்கம் அவதானிக்கப்பட்ட மிகைநிலைமை தொடர்ந்துமிருந்தது.

நடைமுறைக் கணக்கு மிகையில் குறைப்புக் காணப்பட்டபோதும் உயர்ந்த கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் காரணமாக 1985 இல் மூலதனச் செலவினம் அதிகரித்தது. கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் உட்பட மொத்த மூலதனச் செலவினம் ரூ. 313,320 இலட்சங்களாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 44 சதவீதங் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது.

பற்றுக்குறையினை நிதியிடுவதில் வெளிநாட்டு மூலவளங்களைப் பயன்படுத்துகின்ற சார்புரீதியான முக்கியத்துவம் 1985 இல் வீழ்ச்சியடைந்தது. மொத்த வெளிநாட்டு நிதி ரூ. 128,940 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டின் 71 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொத்த வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறையில் 43 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு மூலவளங்களின் பயன்பாடு 7 சதவீதத்திலிருந்து 1985 இல் 8 சதவீதத்திற்கு அதிகரித்தது. உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்தான மூலவளங்களின் பயன்பாடு ரூ. 105,970 இலட்சங்களாக விளங்கி 1984 இன் 42 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 30 சதவீதத்திற்கு வகைகூறியது.

பற்றுக்குறையை நிதியிடுவதற்கு ரூ. 71,270 இலட்சம் வங்கித்தொழில் முறையிலிருந்து பெறப்பட்டது. எனினும் வங்கித்தொழில் முறையிலுள்ள அரசின் காசு நிலுவைகளிலும் வைப்புக்களிலும் ஏற்பட்ட ரூ. 10,980 இலட்சம் கொண்ட அதிகரிப்புக்களின் விளைவாகப் பற்றுக்குறையின் தேறிய விரிவுத்தாக்கம் ரூ. 60,290 இலட்சங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. முன்னைய ஆண்டின் ஒப்பிடத்தக்க தரவுகளுடன் இறைத் தொழிற்பாடுகள் தொடர்பான தரவுகள் அட்டவணை 1.39 இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 1.39

## அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | மொ. உ. உ. விகிதாசாரங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1985 | 1983 | 1984 | 1985 |
| 1- அரசிறை ... | 25,210 | 37,731 | 37,344 | 20.7 | 24.5 | 23.4 |
| வரி அரசிறை ... | 20,701 | 31,215 | 30,815 | 17.0 | 20.3 | 19.3 |
| வரியல்லா அரசிறை ... | 4,509 | 6,516 | 6,529 | 3.7 | 4.2 | 4.1 |
| 2. செலவு ... | 46,816 | 53,592 | 67,103 | 38.5 | 34.9 | 42.0 |
| மீண்டெழும் செலவு ... | 25,083 | 31,842 | 35,771 | 20.6 | 20.7 | 22.4 |
| மூலதனச் செலவு ... | 21,733 | 21,750 | 31,332 | 17.9 | 14.1 | 19.6 |
| 3. நடைமுறைச் கணக்கு மிகை (+) பற்றுக்குறை (—) | 127 | 5,889 | 1,573 | 0.1 | 3.8 | 1.0 |
| 4. மொத்த நிலுவை ... | 21,606 | 15,861 | 29,759 | 17.8 | 10.3 | 18.6 |
| 5. படுகடன் மீள்கொடுப்பனவு ... | 5,302 | 2,229 | 6,709 | 4.4 | 1.4 | 4.2 |
| 6. தேறிய பணப் பற்றுக்குறை ... | 16,580 | 13,632 | 23,050 | 13.6 | 8.9 | 14.4 |
| 7. வரவு செலவு திட்டக்குறையை நிதியிடல் ... | | | | | | |
| வெளிநாடு ... | 10,950 | 11,251 | 12,894 | 9.0 | 7.3 | 8.1 |
| உள்நாடு ... | 11,350 | 3,944 | 17,963 | 9.3 | 2.6 | 11.2 |
| வங்கி ... | 1,204 | — 2,644 | 7,366 | 1.0 | — 1.7 | 4.6 |
| வங்கியல்லா ... | 10,146 | 6,588 | 10,597 | 8.3 | 4.3 | 6.6 |
| பண நிலுவைகளின் பயன்பாடு | — 694 | 666 | — 1,098 | — 0.6 | 0.4 | — 0.7 |
| 8. தேறிய பண பற்றுக்குறையை நிதியிடல் ... | | | | | | |
| வெளிநாடு ... | 9,786 | 9,785 | 11,105 | 8.0 | 6.4 | 6.9 |
| உள்நாடு ... | 7,489 | 3,181 | 13,043 | 6.2 | 2.1 | 8.2 |
| வங்கி ... | 1,168 | — 2,760 | 7,127 | 1.0 | — 1.8 | 4.5 |
| வங்கியல்லா ... | 6,321 | 5,942 | 5,916 | 5.2 | 3.9 | 3.7 |
| பண நிலுவைகளின் பயன்பாடு | — 694 | 666 | — 1,098 | — 0.6 | 0.4 | — 0.7 |
| 9. இறைத் தொழிற்பாட்டின் விரிவுத்தாக்கம் ... | 474 | — 2,095 | 6,029 | 0.4 | — 1.4 | 3.8 |

மூலங்கள்: பொதுத் திறைசேரி
இலங்கை மத்திய வங்கி

### அரசிறை

மொத்த அரசின் அரசிறை 1985 இல் ரூ. 373,440 இலட்சங்களாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டின் 50 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இது 1 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. மொத்த அரச செலவினத்தில் அரசின் அரசிறை 1984 இன் 70 சதவீதத்திலிருந்து 1985 இல் 56 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் பங்கும் 1984 இன் 25 சதவீதத்திலிருந்து 1985 இல் 23 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

வருமானம், உற்பத்தி, செலவினம் என்பனவற்றிலிருந்து பெறப்பட்ட மொத்த வரி அரசிறை 1984 இன் ரூ. 312,150 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 308,150 இலட்சங்களாகக் காணப்பட்டது. வரி அரசிறையில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு ஏற்றுமதி சார்ந்த வரிகளிலிருந்தான குறைந்த பெறுகைகளே பெருமளவு காரணமாகும். வரியல்லா அரசிறை ரூ. 65,290 இலட்சங்களாக விளங்கி 1985 இல் சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியது.

தனியாள், கூட்டு வரிகளை உள்ளடக்கிய வருமானவரிகள் ரூ. 58,520 இலட்சங்களாக விளங்கி அரசின் வரி அரசிறையில் 19 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான தொடர்பினைப் பொறுத்தவரை வருமானவரிகள் முன்னைய ஆண்டினைப் போன்றே 1985 இலும் 3.6 சதவீதத்தில் இருந்தது. தேசிய வருமானத்தின் மாற்றல்களுக்கு வருமானவரிகளின் இசைவினை அளவிடும் வருமானவரிச் செழிப்பு 1984 இன் 2.4 சதவீதத்திலிருந்து 1985 இல் 1.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த வருமானவரியில் 21 சதவீதத்திற்கு வகை கூறும் தனியாள் வருமானவரிகள் முன்னைய ஆண்டின் 100 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக 30 சதவீதத்தினால் ரூ. 12,250 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தது. தனி ஆள் வருமானவரியிலிருந்தான பெறுகைகளில் ஏற்பட்ட கூடியளவு வீழ்ச்சிக்கு வரிவீதங்கள் கீழ்நோக்கித் திருத்தப்பட்டமை, வரிக்கூறுகள் விரிவாக்கப்பட்டமை, வரிவிலக்கு எல்லைகள் அதிகரிக்கப்பட்டமை, மற்றும் 1985 இல் புத்தாக்கத் தீர்வை நீக்கப்பட்டமை என்பன பெருமளவு காரணங்களாகும். தனியாள் வருமானவரிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மாறாகக் கூட்டு வருமானவரிகள் ரூ. 46,270 இலட்சங்களாக விளங்கி 1984 இன் 50 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு எதிராக 1985 இல் 24 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன.

ஏற்றுமதித் தீர்வைகள், இறக்குமதித் தீர்வைகள், மொத்த விற்பனை வரிகள், குடிவகை மீதான தீர்வைகள், உரிமக் கட்டணங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய உற்பத்தி, செலவினம் மீதான வரிகளிலிருந்தான மொத்த அரசிறை ரூ. 249,080 இலட்சங்களாக விளங்கி 1984 இனைவிடச் சிறிதளவு குறைவைக் காட்டியது. 1985 இன் வரி அரசிறையில் 81 சதவீதத்தினைக் கொண்டுள்ள உற்பத்தி மற்றும் செலவின வரிகள் 1984 இன் 49 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 இல் 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

பண்ட விலைகளில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சியும், உற்பத்தியாளர் இலாப எல்லைகளைப் பாதுகாக்கும் பொருட்டுத் தீர்வை அமைப்புக்களின்கீழ் நோக்கிய திருத்தங்களின் நியதிகளுக்கிசைவான கொள்கையும் அரச அரசிறையில் ஏற்றுமதித் தீர்வைகளின் சார்பு ரீதியான முக்கியத்துவத்தினைக் குறைத்துவிட்டன. ஏற்றுமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறை 1984 இன் 29 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக ரூ. 18,700 இலட்சங்களுக்கு 41 சதவீதத்தினால் மிகக் கூடியளவில் வீழ்ச்சியடைந்தது. அரச அரசிறையில் ஏற்றுமதித் தீர்வைகளின் சார்பு ரீதியான பங்கு 1985 இல் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. 1978 இற்கும், 1984 இற்கும் இடையில் அரச வரி அரசிறையில் ஏறத்தாழ 24 சதவீதத்தினைக் கொண்டிருந்த ஏற்றுமதித் தீர்வைகள் 1985 இல் 6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் ஏற்றுமதி வரி/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

ஏற்றுமதித் தீர்வைகளில் ஏற்பட்ட குறைப்பு, ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சி என்பனவற்றின் விளைவாகத் தேயிலையின் மீதான ஏற்றுமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் 33 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் இறப்பரிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் 75 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. தெங்கின் மீதான ஏற்றுமதித் தீர்வைகளில் கீழ்நோக்கிய திருத்தம் காணப்பட்ட வேளையிலும் அதிகரித்த ஏற்றுமதி அளவுகளின் பெருமளவு காரணமாகத் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் 4 சதவீதத்தினால் அதிகரித்தன.

இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான சேகரிப்புக்கள் ரூ. 83,970 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 6 சதவீதத்தால் அதிகரித்தன. அரச வரி அரசிறையில் இறக்குமதித் தீர்வையின் பங்கு முன்னைய ஆண்டின் 25 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 27 சதவீதமாகக் காணப்பட்டது. இறக்குமதிகளின் உள்நாட்டுப் பெறுமதி அதிகரித்தபோதும் இறக்குமதித் தீர்வைகளில் ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்பு உள்ளூர் கைத்தொழில்களுக்குப் பயனுள்ள பாதுகாப்புக்களை வழங்கும் அடிப்படையில் இறக்குமதித் தீர்வை அமைப்பினை ஒழுங்குபடுத்துவதனை நோக்கமாகக் கொண்ட குடியரசுத் தலைவரின் தீர்வை ஆணைக்குழுவின் எடுத்துரைப்புக்களை நடைமுறைப்படுத்தியமையினால் தோன்றியதாகும்.

தேயிலைப் பெறுமான விகித வரிகள், குடிவகை, புகையிலை மீதான கலால் தீர்வைகள் என்பனவற்றை உள்ளடக்கிய தெரிந்தெடுக்கப்பட்ட விற்பனை வரிகள் ரூ. 39,280 இலட்சங்களாக அமைந்து அரசின் வரி அரசிறையில் 13 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. தேயிலை விலைகளில் ஏற்பட்ட கூடியளவு வீழ்ச்சியின் காரணமாகத் தேயிலைப் பெறுமான விகித வரியிலிருந்தான சேகரிப்புக்கள் 68 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தவேளையில் குடிவகை மீதான கலால் தீர்வைகளிலிருந்தான பெறுகைகள் சிறிதளவாக அதிகரித்தது. புகையிலை மீதான கலால் தீர்வையிலிருந்தான பெறுகைகள் 1984 இன் ரூ. 15,370 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 18,780 இலட்சங்களாக விளங்கியது. இக்கூடியளவு அதிகரிப்பிற்கு வரி வீதங்களில் ஏற்பட்ட மேல்நோக்கிய திருத்தமும் உயர்ந்தளவு விற்பனைகளுமே காரணங்களாகும். தேயிலையிலிருந்தான குறைந்த சேகரிப்புக்களின் காரணமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட விற்பனை வரிகளின் கீழான சேகரிப்புக்கள் குறைவடைந்தன. இது குடிவகை, புகையிலை ஆகியவற்றிலிருந்தான சேகரிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினால் கூடுதலாக எதிரீடு செய்யப்பட்டது.

தொடர்ந்து நான்காவது ஆண்டாக மொத்த விற்பனை வரிகள் ரூ. 101,950 இலட்சங்களாக விளங்கி அரச அரசிறையின் மிகப் பெரும் மூலவளத்தினைக் கொண்டிருந்ததுடன் முன்னைய ஆண்டினைவிட 25 சதவீதம் கொண்ட அதிகரிப்பினையும் பதிவு செய்தது. 1984 இன் மொத்த வரி அரசிறையில் இதன் பங்கு 26 சதவீதத்திலிருந்து 1985 இல் 33 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக நோக்குகையில் இது 1984 இன் 5.3 சதவீதத்திலிருந்து 1985 இல் 6.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்த உள்நாட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கான மொத்த விற்பனை வரியின் இசைவினை அளவிட்ட மொத்த விற்பனை வரியின் செழிப்பு 1984 இன் 1.89 உடன் ஒப்பிடுகையில் 1985 இல் 2.51 என மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த விற்பனை வரிகளின் உயர்ந்த அரசிறைச் செழிப்பு பெரும்பாலும் 1985 இற்கான வரவுசெலவுத் திட்டத்தில் வரி அடிப்படையை விரிவாக்குவதனை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சுயவிருப்பு வழிமுறைகளினால் ஏற்பட்டதாகும். இவ்வழிமுறைகள் வரி வீதங்களில் அதிகரிப்பு, வரி அடிப்படைகளின் விரிவாக்கம், சிறந்த சட்ட நடைமுறைப்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன. தயாரிப்புத்துறையிலிருந்தான வரிச் சேகரிப்பு ரூ. 36,190 இலட்சங்களாக அமைந்து 19 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் கொண்டிருந்த வேளையில் தயாரிப்பு அல்லாத் துறையிலிருந்தான மொத்த விற்பனை வரிகளின் சேகரிப்பு ரூ. 27,460 இலட்சங்களாக அமைந்து 42 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தது, இறக்குமதிகள் மீதான மொத்த விற்பனை வரிகள் ரூ. 38,300 இலட்சங்களுக்கு 21 சதவீதத்தினால் அதிகரித்தன.

## அட்டவணை 1.40

### அரசின் இறைத் தொழிற்பாடுகள் (அ)

| | வளர்ச்சி வீதங்கள் (%) | | | மொ.உ.உ. யின் சதவீதம் (%) | | | மொத்த வருமானத்தின் சதவீதம் (%) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1985 | 1983 | 1984 | 1985 | 1983 | 1984 | 1985 |
| 1. வரி அரசிறை ... | 34.2 | 50.8 | —1.3 | 17.0 | 20.3 | 19.3 | 82.1 | 82.7 | 82.5 |
| 1.1. உற்பத்தியினதும் செலவினதும் வரிகள் ... | 32.5 | 48.5 | —2.9 | 14.2 | 16.7 | 15.6 | 68.5 | 68.0 | 66.7 |
| 1.1.1. பொதுவான விற்பனைகளினதும் மொத்தவிற்பனைகளினதும் வரிகள் ... | 53.6 | 30.8 | 25.2 | 5.1 | 5.3 | 6.4 | 24.7 | 21.6 | 27.3 |
| 1.1.2 தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை வரிகள் ... | 42.1 | 79.2 | —32.1 | 2.7 | 3.8 | 2.4 | 12.8 | 15.3 | 10.5 |
| 1.1.3 இறக்குமதித் தீர்வைகள் ... | 50.1 | 64.3 | 5.6 | 4.0 | 5.2 | 5.2 | 19.2 | 21.1 | 22.5 |
| 1.1.4 ஏற்றுமதித் தீர்வைகள் ... | —1.0 | 29.1 | —41.1 | 2.0 | 2.1 | 1.2 | 9.8 | 8.4 | 5.0 |
| 1.1.5 உரிம வரிகள் ... | 29.6 | 3.3 | —2.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.7 | 0.5 | 0.5 |
| 1.1,6 சொத்து மாற்றல் வரி ... | 30.7 | 21.2 | —0.4 | 0.3 | 0.3 | 0.2 | 1.3 | 1.1 | 0.9 |
| 1.2 கூட்டு கூட்டல்லா வருமான வரிகள் ... | 15.2 | 62.7 | 6.8 | 2.7 | 3.6 | 3.6 | 13.4 | 14.5 | 15.7 |
| 1.2.1 கூட்டு ... | 17.1 | 50.3 | 24.4 | 2.0 | 2.4 | 2.9 | 9.8 | 9.8 | 12.4 |
| 1.2.2 கூட்டல்லா ... | 10.4 | 97.4 | —30.4 | 0.7 | 1.1 | 0.7 | 3.6 | 4.7 | 3.3 |
| 1.3 மூலதன மாற்றல் வரிகள் ... | —7.2 | 36.1 | —32.9 | 0.1 | 0.1 | ... | 0.2 | 0.2 | 0.1 |
| 2. வரியல்லா வருமானம் ... | 80.8 | 44.5 | 0.2 | 3.7 | 4.2 | 4.1 | 17.9 | 17.3 | 17.5 |
| 2.1 அரச வர்த்தக முயற்சிகளிலிருந்தான மொத்த பெறுகைகள் ... | 14.5 | 42.0 | —4.7 | 1.1 | 1.2 | 1.1 | 5.2 | 5.0 | 4.7 |
| 2.2 வட்டி இலாபங்களும் பங்கு இலாபங்களும் ... | 71.4 | 143.1 | 39.2 | 0.6 | 1.1 | 1.4 | 2.7 | 4.3 | 6.2 |
| 2.3 விற்பனைகளும் கட்டணங்களும் ... | —23.7 | 24.0 | 5.5 | 0.2 | 0.3 | 0.3 | 1.4 | 1.2 | 1.5 |
| 2.4 சமூக பாதுகாப்பு உதவு தொகைகள் ... | —0.6 | 19.0 | 7.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.3 | 0.2 | 0.2 |
| 2.5 ஏனைய நடைமுறை மாற்றல்கள் ... | 122.0 | —30.0 | —39.1 | 0.1 | 0.1 | 0.1 | 1.8 | 0.8 | 0.1 |
| 2.6 மூலதனப்பொருட்களின் விற்பனை ... | —52.3 | 32.6 | 53.8 | ... | ... | ... | ... | ... | 0.1 |
| 2.7 கடன்களினதும் முற்பணங்களினதும் மீள் கொடுப்பனவுகள் ... | 54.6 | 252.1 | —58.1 | 0.1 | 0.3 | 0.1 | 0.6 | 1.4 | 0.6 |
| 2.8 மத்திய வங்கி மாற்றல் ... | — | 10.0 | —9.1 | 1.2 | 0.9 | 0.9 | 6.0 | 4.4 | 4.0 |
| மொத்தம் ... | 41.6 | 49.7 | —1.0 | 20.7 | 24.7 | 23.4 | 100.0 | 100.0 | 100.0 |

மூலங்கள் : பொதுத் திறைசேரி
இலங்கை மத்திய வங்கி.

(அ) அரச அரசிறையின் விபரமான பகுப்பாய்வு புள்ளிவிபரப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

உரிமக் கட்டணங்களில் அதிகரிப்புக் காணப்பட்டபோதும் இம் மூலங்களின் அரசிறையிலிருந்தான பெறுகைகள் ரூ. 1,900 இலட்சங்களுக்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. சொத்து மாற்றல் வரிகளிலிருந்தான சேகரிப்புக்கள் ரூ. 3,280 இலட்சங்களாக விளங்கி 19 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை எடுத்துக் காட்டியது.

மொத்த வரியல்லா அரசிறை ரூ. 65,290 இலட்சங்களாக விளங்கி 1985 இன் அரச அரசிறையில் 18 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. கடன் கரைப்பு நிதிய முதலீடுகளிலிருந்தான உயர்ந்த பெறுகைகளின் பெருமளவு காரணமாக வட்டி வருமானம் 72 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. ரூ. 4,250 இலட்சங்களாக விளங்கிய மொத்த இலாபங்களும் பங்கிலாபங்களும் 24 சதவீதம் கொண்ட வீழ்ச்சியை எடுத்துக் காட்டின. ரூ. 15,000 இலட்சம் கொண்ட வரியல்லா அரசிறை மத்திய வங்கிக்கான அரசின் படுகடன் கடப்பாடு களைத் தீர்ப்பனவு செய்யும் பொருட்டு மத்திய வங்கியினால் அரசிற்கு மாற்றல் செய்யப்பட்ட இலாப மாற்றல்களாகும்.

அரசின் அரசிறைச் செயலாற்றக் குறிகாட்டிகள் அட்டவணை 1.40 இல் காட்டப்பட்டுள்ளது.

### செலவினம்

நடைமுறை, மூலதனக் கணக்குகளால் உருவாக்கப்பட்ட அரச செலவினம் ரூ. 671,030 இலட்சங்களாக விளங்கி 1984 இன் 15 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 இல் 25 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது. மொத்தச் செலவினத்தில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் செலவினம்/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 1984 இன் 35 சதவீதத்திலிருந்து 1985 இல் 42 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1985 இல் மொத்தச் செலவினத்தில் ஏற்பட்ட கூடியளவு அதிகரிப்பிற்கு மூலதனச் செலவினம் 1984 இன் 1 சதவிதத்திற்கும் குறைவான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 95,820 இலட்சம் அல்லது 44 சதவீதத்தினால் ரூ. 313,320 இலட்சங்களுக்கு அதிகரித்தமையே காரணமாகும்.

முற்பணக் கணக்கின் வெளிக் கொடுப்பனவான ரூ. 21,500 இலட்சங்களையும் உள்ளடக்கிய மொத்த மீண்டெழும் செலவினம் 1985 இல் ரூ. 357,710 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 12 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. எனினும் மீண்டெழும் செலவினம்/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 1984 இன் 21 சதவீதத்திலிருந்து 1985 இல் 22 சதவீதத்திற்குச் சிறிதளவால் அதிகரித்து மீண்டெழும் செலவினத்தின் மெது வான வளர்ச்சியை எடுத்துக் காட்டியது. மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பாதுகாப்புடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் மீதான உயர்ந்த செலவினமே முக்கிய காரணமாகும்.

1985 இன் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 44 சதவீதத்திற்கு வகை கூறிய பொருட்கள் பணிகள் மீதான செலவினம் 1984 இன் ரூ. 136,460 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 159,040 இலட்சங்களாக விளங்கியது. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக நோக்குகையில் பொருட்கள், பணிகள் மீதான செலவினம் 1984 இன் 9 சதவீதத்திலிருந்து 1985 இல் 10 சதவீதத்திற்கு அதிகரித்தது. பொருட்கள், பணிகள் மீதான மொத்தச் செலவினத்தில்

ரூ. 77,300 இலட்சம் சம்பளங்கள், கூலிகள் காரணமாக ஏற்பட்டதுடன் இது முன்னைய ஆண்டினைவிட 22 சதவீத அதிகரிப்பினையும் பதிவு செய்தது. சம்பளங்கள், கூலிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு ஆசிரியர் களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டமையும் பாதுகாப்பு ஆளணியினரின் உயர்ந்த கூலிச் செலவும் காரணங்களாக இருந்தது. ரூ. 81,740 இலட்சங்களாகக் காணப் பட்ட ஏனைய பொருட்கள், பணிகள் மீதான செலவினம் மகாவலி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் சார்பான வரிக்கொடுப்பனவான ரூ. 18,480 இலட்சங்களையும் இறக்குமதித் தீர்வை தள்ளுபடி கணக்கின் மீதான ரூ. 500 இலட்சங்களையும், வர்த்தக முயற்சிகளின் மீதான ரூ. 9,810 இலட்சங்களையும், பாதுகாப்பு நட வடிக்கைகளின் மீதான ரூ. 14,980 இலட்சங்களையும் உள்ளடக்கியிருந்தது.

இவ்வாண்டுக் காலத்தில் கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள் ரூ. 16,750 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 10 சதவீத வீழ்ச்சியை எடுத்துக் காட்டியது. இவற்றில் ரூ. 10,250 இலட்சம் பல்வேறு உதவு தொகைகளின்மீது மாற்றல் செய்யப்பட்டன. இது வளமாக்கி (ரூ. 10,000 இலட்சம்), தேசிய பாற்சபை (ரூ. 250 இலட்சம்) ஆகியவற்றை உள்ளடக்கி யிருந்தது. ரூ. 1,000 இலட்சம் கொண்டதொரு தொகை கூட்டுத்தாபனங்களின் இழப்புக்களை ஈடுசெய்வதற்காக இவ்வாண்டுக் காலத்தில் மாற்றல் செய்யப் பட்டது. இம்மாற்றல்களின் முக்கிய பெறுநர்களாகத் தேசிய அபிவிருத்தி வங்கி (ரூ. 270 இலட்சம்), அரச வன்கலக் கூட்டுத்தாபனம் (ரூ. 420 இலட்சம்) என்பன காணப்பட்டன. உள்ளூராட்சி சபைகள் மற்றும் ஏனைய நிறுவனங் களுக்கான மாற்றல்கள் 1984 இன் ரூ. 6,480 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 13,640 இலட்சங்களாகக் காணப்பட்டது.

குடியிருப்பாளர்களுக்கான மாற்றல்கள் ரூ. 61,510 இலட்சங்களாக விளங்கி 1985 இல் 16 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. குடியிருப்பாளர்களுக்கான மாற்றல்கள் ஓய்வூதியம் (ரூ. 23,640 இலட்சம்), உணவு முத்திரைகள் (ரூ. 14,370 இலட்சம்), தேசிய சேமிப்பு வங்கிக்கான வட்டி உதவு தொகை (ரூ. 4,950 இலட்சம்), மண்ணெண்ணெய் முத்திரைகள் (ரூ. 4,220 இலட்சம்), பள்ளிக்கூடச் சிறுர்களுக்கான இலவசப் பாடப் புத்தகங்கள் (ரூ. 600 இலட்சம்), பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கான நண்பகல் உணவு (ரூ. 570 இலட்சம்), சமூகப் பணிகள் திணைக்களத்தின் கீழான நலன்புரிக் கொடுப்பனவுகள் (ரூ. 2,780 இலட்சம்), சிக்கனமற்ற பாதைகளின் இழப்பை ஈடுசெய்வதற்காக இலங்கைக் போக்குவரத்துச் சபைக்கான உதவு தொகை (ரூ. 1,350 இலட்சம்) என்பன வற்றை உள்ளடக்கியுள்ளன.

அரசபடுகடன் மீதான வட்டிகளின் காரணமாக ஏற்பட்ட மொத்தக் கொடுப்பனவுகள் ரூ. 85,270 இலட்சங்களாக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 15 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. மொத்த மீண்டெழும் செலவினத்தின் சதவீதமாக நோக்குகையில் வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் 23 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 24 சதவீதத்திற்கு வகை கூறின.

முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூ. 29,160 இலட்சம் கொண்ட தேறிய வெளிக் கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 21,500 இலட்சம் கொண்ட தேறிய வெளிக்கொடுப்பனவினை விளைவித்தன. முற்பணக் கணக்கின் மீதான தேறிய வெளிக் கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பு அரச திணைக்களங்களுடன் தொடர்பான கணக்குகள், முற்பணக் கணக்குகள்

UNIVERSITY OF MORATUWA LIBRARY

## அட்டவணை 1.41

## அரசின் செலவினம்

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | வளர்ச்சி வீதம் | | | மொ. உ. உ. விகிதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1985 | 1983 | 1984 | 1985 | 1983 | 1984 | 1985 |
| 1. நடைமுறைச் செலவு ... | 25,083 | 31,842 | 35,771 | 30.4 | 26.9 | 12.3 | 20.6 | 20.7 | 22.4 |
| 1.1 பொருட்கள் பணிகள் மீதான செலவு ... | 10,316 | 13,646 | 15,904 | 18.9 | 32.3 | 16.5 | 8.5 | 8.9 | 9.9 |
| 1.1.1 சம்பளங்களும் கூலிகளும் ... | 5,577 | 6,313 | 7,730 | 11.1 | 13.2 | 22.4 | 4.6 | 4.1 | 4.8 |
| 1.1.2 ஏனைய பொருட்களும் பணிகளும் ... | 4,739 | 7,333 | 8,174 | 29.8 | 54.7 | 11.5 | 3.9 | 4.8 | 5.1 |
| 1.2 மாற்றல் கொடுப்பனவுகள் ... | 13,647 | 15,280 | 17,717 | 19.3 | 12.0 | 15.9 | 11.2 | 9.9 | 11.1 |
| 1.2.1 அரச கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் ... | 1,958 | 1,865 | 1,675 | 15.4 | — 4.7 | — 10.2 | 1.6 | 1.2 | 1.0 |
| 1.2.2 வீட்டுடமை மாற்றல்கள் ... | 4,474 | 5,321 | 6,151 | 8.0 | 18.9 | 15.6 | 3.7 | 3.5 | 3.8 |
| 1.2.3 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்குமான மாற்றல்கள் ... | 609 | 648 | 1,364 | 23.0 | 6.4 | 110.5 | 0.5 | 0.4 | 0.9 |
| 1.2.4 பொதுப்படு கடன் மீதான வட்டி ... | 6,606 | 7,446 | 8,527 | 29.4 | 12.7 | 14.5 | 5.4 | 4.8 | 5.3 |
| 1.3 முற்பணக் கணக்கின் வெளிக்கொடுப்பனவுகள் ... | 1,120 | 2,916 | 2,150 | 227.4 | 160.4 | — 26.3 | 0.9 | 1.9 | 1.3 |
| 2. மூலதனச் செலவு ... | 21,733 | 21,750 | 31,332 | 16.4 | 0.1 | 44.1 | 17.9 | 14.1 | 19.6 |
| 2.1 கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ... | 5,302 | 2,229 | 6,709 | 102.9 | — 57.9 | 200.9 | 4.4 | 1.4 | 4.2 |
| 2.2 அரச கூட்டுத்தாபனங்களுக்கான மூலதன மாற்றல்கள் ... | 10,123 | 11,845 | 11,691 | — 3.2 | 17.0 | — 1.3 | 8.3 | 7.7 | 7.3 |
| 2.3 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் நிறுவனங்களுக்கும் வெளி நாடுகளுக்குமான மூலதன மாற்றல்கள் ... | 328 | 242 | 408 | 80.2 | 26.2 | 68.6 | 0.3 | 0.2 | 0.3 |
| 2.4 நிதிச் சொத்துக்களின் கையேற்பு ... | 801 | 901 | 1,770 | 11.6 | 12.5 | 96.4 | 0.7 | 0.6 | 1.1 |
| 2.5 அரச திணைக்களங்களுக்கான ஒதுக்கு ... | 5,179 | 6,533 | 10,754 | 10.3 | 26.1 | 64.6 | 4.3 | 4.2 | 6.7 |
| 3. மொத்தச் செலவு | 46,816 | 53,592 | 67,103 | 23.5 | 14.5 | 25.2 | 38.5 | 34.9 | 42.0 |

மூலங்கள்: பொதுத் திறைசேரி
இலங்கை மத்திய வங்கி.

மிகை நிலுவைகளிலிருந்தான கடன்கள், களஞ்சியங்கள் பொருட்களுக்கான முற்பணங்கள் என்பனவற்றில் பிரதிபலிக்கப்பட்டது. 1985 இல் முக்கிய வெளிக்கொடுப்பனவுகள் உணவு கொள்வனவு, பகிர்ந்தளிப்புகளுக்கு (ரூ. 11,300 இலட்சம்), அரச கூட்டுத்தாபனங்கள் (ரூ. 7,050 இலட்சம்), அரச மருத்துவக் களஞ்சியப்படுத்தல் (ரூ. 1,870 இலட்சம்), தொலைத் தொடர்புக் களஞ்சியக் கணக்கு (ரூ. 630 இலட்சம்), புகைவண்டித் திணைக்களம் (ரூ. 330 இலட்சம்) என்பன தொடர்பானவைகளாகக் காணப்பட்டன.

இவ்வாண்டுக் காலத்தில் மொத்த மூலதனச் செலவினம் ரூ. 313,320 இலட்சங்களாக அமைந்தது. முன்னைய ஆண்டினை விட மூலதனச் செலவினத்தில் ஏற்பட்ட 44 சதவீத அதிகரிப்பிற்கு ரூபாக் கடன்களின் உயர்ந்தளவு மீள் கொடுப்பனவுகளும் கடன்கரைப்பு நிதியத் தொழிற்பாடுகள் நீக்கப்பட்டமையும் பெருமளவு காரணங்களாக இருந்தன.


கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் நீங்கலான மூலதனச் செலவினம் ரூ. 246,230 இலட்சங்களாக விளங்கி 1984 இனைவிட 26 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக நோக்குகையில் தேறிய மூலதனச் செலவினம் 1984 இன் 13 சதவீதத்திலிருந்து 1985 இல் 15 சதவீதத்திற்கு அதிகரித்தது.

மொத்த மூலதனச் செலவினத்தில், கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் இவ்வாண்டில் ரூ. 116,910 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 1 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இம்மாற்றல்கள் மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான ரூ. 54,920 இலட்சம் கொண்ட தொகையையும், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மீதான ரூ. 10,950 இலட்சம் கொண்ட தொகையையும் உள்ளடக்கியிருந்தன. குறிப்பிட்ட சில கூட்டுத்தாபனங்களுக்குக் கடன்கள் மூலமாக வழங்கப்பட்ட மூலதனச் செலவின ஒதுக்கு முன்னைய ஆண்டின் ரூ. 9,010 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 17,700 இலட்சங்களாக விளங்கியது. மின்மாற்றிகளில் முதலீடு, செயற்றிட்டங்களைப் பரந்தமைத்தல் ஆகியவற்றிற்காக இக்கடன்களைப் பெற்ற இலங்கை மின் சபையே இக்கடன்களின் முதன்மைப் பெறுநராக இருந்தது. உள்ளூராட்சி சபைகளுக்கான மூலதன மாற்றல்கள் ரூ. 640 இலட்சங்களாக விளங்கிய வேளையில், ஏனைய நிறுவனங்களுக்கான மாற்றல்கள் ரூ. 2,690 இலட்சங்களாக இருந்தன. அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் சார்பான மூலதனச் செலவினம் ரூ. 107,540 இலட்சங்களாக அமைந்து, முன்னைய ஆண்டினைவிட ஏறத்தாழ 65 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. எனினும் மூலதனச் செலவின்மீது பதிவு செய்யப்பட்ட குறைச் செலவு 1985 இல் ஏறத்தாழ 6 சதவீதமாக இருந்தது. அரச செலவினத்தின் விபரமானதொருபகுப்பாய்வு அட்டவணை 1.41 இல் தரப்பட்டுள்ளது.

**வரவு செல்வுத் திட்டப் பற்றுக்குறையும் அதனை நிதியிடலும்**

1985 இல் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள் ரூ. 297,590 இலட்சம் கொண்ட முழுமையான பற்றுக்குறையினை ஏற்படுத்தி முன்னைய ஆண்டினைவிட ஏறத்தாழ இரண்டு மடங்கு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மொத்த அரச செலவினத்தில் முழுமையான பற்றுக்குறை 1984 இன் 30 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1985 இல் 44 சதவீதத்திற்கு வகை கூறியது. மொத்த உள்நாட்டு

அரசின் அரசிறையும் செலவும்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

உற்பத்தியின் விகிதமாக நோக்குகையில் முழுமையான பற்றுக்குறை 1984 இன் 10 சதவீதத்திலிருந்து 1985 இல் 19 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1985 இல் தேறிய காசுப் பற்றுக்குறை ரூ. 230,500 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 69 சதவீதம் கொண்ட கூடியளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்த வேளையில் தேறிய காசுப் பற்றுக்குறை/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 9 சதவீதத்திலிருந்து 1985 இல் 14 சதவீதத்திற்கு அதிகரித்தது.

தேறிய காசுப் பற்றுக்குறையினை நிதியிடுவதில் ரூ. 111,050 இலட்சம் கொண்ட தொகை வெளிநாட்டு மூலவளங்களிலிருந்து பெறப்பட்டது. வெளிநாட்டுக் கடன்களும் கொடைகளும் தேறிய காசு பற்றுக்குறையில் 1984 இன் 72 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 48 சதவீதத்திற்கு வகை கூறின. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் தேறிய காசுப் பற்றுக்குறையை நிதியிடுவதில் வெளிநாட்டு மூலவளங்களின் பயன்பாடு 1984 இன் 6 சதவீதத்திலிருந்து 1985 இல் 7 சதவீதத்திற்குச் சிறிதளவால் அதிகரித்தது. செயற்றிட்ட, பண்ட, ஏனைய கடன்கள் வாயிலாகப் பெறப்பட்ட மொத்த வெளிநாட்டுக் கடன்கள் 1984 இன் ரூ. 64,920 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 71,090 இலட்சங்களாக விளங்கியது. மொத்த வெளிநாட்டுக் கொடைகள் ரூ. 39,960 இலட்சங்களாக அமைந்து மொத்த வெளிநாட்டு நிதியில் 1984 இன் 34 சதவீதத்திற் கெதிராக 1985 இல் 36 சதவீதத்திற்கு வகை கூறியது.


வங்கியல்லா மூலங்களிலிருந்து திரட்டப்பட்ட தேறிய மூலவளங்கள் 1985 இல் ரூ. 59,160 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிடச் சிறிதளவு வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. தேறிய காசுப் பற்றுக்குறையில் 26 சதவீதத்திற்கு வகை கூறிய வங்கியல்லா மூலங்களிலிருந்தான கடன்பாடுகள் ஊழியர் சேமநிதியத்திலிருந்தான ரூ. 27,480 இலட்சம், தேசிய சேமிப்பு வங்கியிலிருந்தான ரூ. 17,770 இலட்சம் ஏனைய கிடைக்கத்தக்க கிடைக்கத்தகாத மூலங்களிலிருந்தான ரூ. 7,550 இலட்சம் ஆகிய தொகைகளை உள்ளடக்கியிருந்தன.

வங்கித் தொழில் முறைகளிலிருந்தான அரசின் கடன்பாடுகள் ரூ. 71,270 இலட்சங்களாக விளங்கி இவ்வாண்டுக் காலத்தில் வங்கி நிதிக்கான அதிகரித்த நாட்டலைப் பிரதிபலித்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்திற்கு வகை கூறியது. வங்கித் தொழில் முறையிலிருந்தான மூலவளங்களின் பயன்பாடு முன்னைய ஆண்டின் ரூ. 20,950 இலட்சம் கொண்ட சுருக்கத் தாக்கத்திற்கு மாறாக ரூ. 60,290 இலட்சம் கொண்ட தேறிய விரிவுத்தாக்கத்தை விளைவித்தது.

### அரச படுகடன்

வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறை தொடர்ந்தும் உள்நாட்டு, வெளிநாட்டுப் படுகடன்களால் இணைந்து நிதியிடப்பட்டதன் விளைவாக வெளிநின்ற அரச படுகடன் 1984 இன் ரூ. 1,059,180 இலட்சங்களிலிருந்து 1985 இல் 1,308,700 இலட்சங்களுக்கு அதிகரித்தது. பொதுப் படுகடனின் வளர்ச்சி பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியை விஞ்சியதுடன் 1984 இன் 69 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1985 இல் 82 சதவீதம் கொண்ட உயர்ந்த படுகடன் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தையும் ஏற்படுத்தியது. வெளிநின்ற மொத்த அரச படுகடன் ரூ. 631,970 இலட்சம் கொண்ட உள்நாட்டுப் படுகடனையும் ரூ. 676,730 இலட்சம் கொண்ட வெளிநாட்டுப் படுகடனையும் உள்ளடக்கியிருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டுப் படுகடன் 21 சத

## அரச படுகடனின் உள்ளடக்கம்*




இலங்கை மத்திய வங்கி

* கடன்களரப்பு நிதியங்கள் நீங்கலாக அரச மொத்தப் படுகடன்

வீதத்திலுல் அதிகரித்த வேளேயில் வெளிநாட்டுச் செலாவணித் தளம்பல்களின் காரணமாக ஏற்பட்ட ரூ. 68,830 இலட்சம் கொண்ட மேலதிக பொறுப்புக்களே யும் உள்ளடக்கிய வெளிநாட்டுப் படுகடன் 26 சதவீதத்திலுல் அதிகரித்தது. எனினும், செலாவணி வீதத் தளம்பல்களின் விளேவாக ஏற்பட்ட பொறுப்பு நீங்கலாக வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்பாடு 13 சதவீதம் கொண்ட வீழ்ச்சி யைப் பதிவு செய்தது. அரச படுகடனின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டுப் படுகடன்கூறு 1984 இன் 35 சதவீதத்திலிருந்து 1985 இல் 42 சதவீதத்திற்கு அதிகரித்த வேளேயில் உள்நாட்டுப் படுகடன்/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 34 சதவீதத்திலிருந்து 39 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1985 இறுதியில் கடன் கரைப்பு நிதியம் தவிர்ந்த அரசின் படுகடன் ரூ. 1,237,200 இலட்சங்களாக அமைந்து 29 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது.

அட்டவணே 1.42

**அரச படுகடன்**

ட. இ. ரூபாய்களில்

| மூலம் | பத்து இலட்சம் ரூபாய்கள் | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | வெளி நிற்கும் தொகை | | மாற்றம் | | | |
| | 1984 | 1985 | 1984 | 1985 | 1984 | 1985 |
| 1. உள்நாட்டுப் படுகடன் ... | 52,236.9 | 63,196.7 | — 117.7 | 10,959.8 | — 0.2 | 21.0 |
| 2.1 நடுத்தர நீண்டகால படுகடன் ... | 33,323.8 | 36,689.1 | 1,173.7 | 3,365.3 | 3.7 | 10.1 |
| 2.1.1 ரூபாக் கடன்கள் ... | 33,227.4 | 36,570.1 | 1,273.8 | 3,342.8 | 4.0 | 10.1 |
| 2.1.2 நிர்வாகக் கடன்கள் ... | 96.3 | 119.0 | — 100.2 | 22.5 | —51.0 | 23.6 |
| 2.2 குறுங்காலப் படுகடன் ... | 18,913.1 | 26,507.6 | — 1,291.0 | 7,594.0 | — 6.4 | 40.2 |
| 2.2.1 திறைசேரி உண்டியல்கள் ... | 14,860.0 | 22,280.0 | — 2,540.0 | 7,420.0 | —14.6 | 49.9 |
| 2.2.2 வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ... | 9.6 | 9.4 | — 0.3 | — 0.2 | — 3.0 | — 2.1 |
| 2.2.3 மத்திய வங்கியின் முற்பணங்கள் ... | 4,043.5 | 4,218.2 | 1,249.0 | 174.7 | 44.7 | 4.3 |
| 2. வெளிநாட்டுப் படுகடன்கள் ... | 53,680.8 | 67,673.2 | 7,655.7 | 13,992.4 | 16.6 | 26.1 |
| 1.1 செய்யற்றிட்டக் கடன்கள் | 25,971.0 | 36,405.9 | 6,440.0 | 10,434.9 | 33.0 | 40.2 |
| 1.2 செய்யற்றிட்ட மல்லாக் கடன்கள் ... | 27,709.8 | 31,267.3 | 1,215.7 | 3,557.5 | 4.6 | 12.8 |
| 1.2.1 பண்டம் ... | 18,426.3 | 22,372.9 | 538.3 | 3,946.6 | 3.0 | 21.4 |
| 1.2.2 ஏனையவை ... | 9,283.5 | 8,894.4 | 678.0 | — 389.1 | 7.9 | — 4.2 |
| மொத்தம் | 105.917.7 | 130,869.9 | 7,538.0 | 24,952.2 | 7.7 | 23.6 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

மொத்தப் படுகடனில் 48 சதவீதத்திற்கு வகை கூறிய உள்நாட்டுப் படுகடன் கூறு ரூ. 366,890 இலட்சம் கொண்ட நடுத்தர, நீண்டகால படுகடனேயும் ரூ. 265,080 இலட்சம் கொண்ட குறுங்காலப் படுகடனேயும் உள்ளடக்கியிருந்தது. நடுத்தர, நீண்ட காலப் படுகடன் முன்னேய ஆண்டினேவிட 10 சதவீதத்திலுல் அதிகரித்த வேளேயில் குறுங்காலப் படுகடன் 40 சதவீதத்திலுல் அதிகரித்தது.

இதன்படி மொத்த உள்நாட்டுப் படுகடனில் நடுத்தர நீண்டகாலப் படுகடனின் பங்கு 64 சதவீதத்திலிருந்து 1985 இல் 58 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் குறுங்காலப் படுகடனின் பங்கு 36 சதவீதத்திலிருந்து 42 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1985 இறுதியிலுள்ளவாறுன வெளிநின்ற படுகடனின் உள்ளடக்கம் முன்னைய ஆண்டின் ஒப்பிடத்தக்க எண்தொகைகளுடன் அட்டவணை 1.42 இல் தரப்பட்டுள்ளது.


மொத்த நடுத்தர நீண்டகால உள்நாட்டுப் படுகடனின் 100 சதவீதத்தினை பெரும்பாலும் கொண்டிருந்த ரூபாக் கடன்கள் முன்னைய ஆண்டின் 4 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 10 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வாண்டுக் காலத்தில் ரூபாப் பிணைகள் மூலமாக 1984 ஆம் ஆண்டின் ரூ. 43,440 இலட்சம் கொண்ட தொகைக்கெதிராக ரூ. 105,500 இலட்சம் கொண்ட தொகை பெறப்பட்டது. 1985 இல் ரூபாக் கடன்களின் முக்கிய உதவுநர்களாகத் தேசிய சேமிப்பு வங்கியும், ஊழியர் சேம நிதியமும் விளங்கின.

1985 இல் தேசிய சேமிப்பு வங்கி ரூ. 56,300 இலட்சங்களை அல்லது ரூபாக் கடன்களின் மொத்தப் பெறுமதியில் 53 சதவீதத்தை உதவியது. இது முன்னைய ஆண்டினைவிட நான்கு மடங்கு கூடுதலான அதிகரிப்பாகும். கடந்த கால முதலீடுகளிலிருந்தான அதிகரித்த பெறுகைகளின் காரணமாகத் தேசிய சேமிப்பு வங்கியினால் உதவுதொகைகளின் உயர்ந்த மட்டங்களைப் பெறக்கூடியதாக விருந்தது. தேசிய சேமிப்பு வங்கியின் மொத்தச் சேமிப்புக்கள் முன்னைய ஆண்டின் ரூ. 21,100 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 16,850 இலட்சங்களாக விளங்கியது. கடந்தகால முதலீடுகளிலிருந்தான பெறுகைகள் 1984 இன் ரூ. 26,380 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 63,260 இலட்சங்களாகக் காணப்பட்டது. 1985 இல் ஊழியர் சேமநிதியம் ரூபாக் கடன்களில் 42 சதவீதத்தினை அல்லது ரூ. 44,180 இலட்சங்களை உதவியதுடன் முன்னைய ஆண்டினைவிட 40 சதவீதம் கொண்ட அதிகரிப்பினையும் எடுத்துக் காட்டியது. இவ்வதிகரிப்பிற்கு உறுப்பினர் உதவு தொகைகளிலிருந்தான உயர்ந்த பெறுகைகளின் மூலம் திரட்டப்பட்ட மூலவளங்களின் கிடைப்பனவும், முதலீடுகளிலிருந்தான வருமானமும் காரணங்களாகும். 1985 இல் உறுப்பினர் உதவு தொகைகளிலிருந்தான மொத்தப் பெறுகைகள் ரூ. 19,210 இலட்சத்திற்கு 21 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் முதலீடுகளிலிருந்தான வருவாய் ரூ. 15,520 இலட்சங்களுக்கு 30 சதவீதத்தினால் அதிகரித்தது. ஊழியர் சேமநிதியத்திற்கு முதலீடுகளின் முதிர்வுகளிலிருந்து ரூ. 24,850 இலட்சம் கொண்ட பெறுகையும் கிடைத்தது.

இவ்வாண்டில் ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் ஏனைய உதவுநர்களாக ஓய்வூதியமும் சேமநிதியும் (ரூ. 1,750 இலட்சம்), இலங்கை வங்கி (ரூ. 1,500 இலட்சம்), திணைக்கள மற்றும் ஏனைய அலுவல்சார் நிதியங்கள் (ரூ. 1,250 இலட்சம்), தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (ரூ. 290 இலட்சம்), தேசிய வீடமைப்புக் கடன் கரைப்பு நிதியம் (ரூ. 190 இலட்சம்), அஞ்சல் அலுவலக பாதுகாப்பு நிதியம் (ரூ. 40 இலட்சம்) என்பன விளங்கின. ரூபாக் கடன்களின் மீது இவ்வுதவுநர்களினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ. 5,020 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட மூன்று மடங்கு அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

இவ்வாண்டுக் காலத்தில் ரூபாப் பிணைகள் மூலமாகத் திரட்டப்பட்ட மூல வளங்கள் அதிகரித்த வேளையில் ரூபாப் பிணைகள் மீதான வட்டி வீதம் 1985 செத்தெம்பர் 1 ஆம் நாளிலிருந்து ஆண்டிற்கு 16 சதவீதத்திலிருந்து 14 சத

## உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்*




இலங்கை மத்திய வங்கி

* கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக மொத்த உள்நாட்டுப் படுகடன்

வீதத்திற்குக் குறைக்கப்பட்டது. இதன் காரணமாக ரூ. 70,000 இலட்சம் கொண்ட ரூபாப் பிணைகள் அல்லது பிணைகளின் மொத்தப் பெறுமதியில் 66 சத வீதம் ஆறு ஆண்டுக்கால முதிர்ச்சியுடன் 16 சதவீதத்தில் வழங்கப்பட்டதுடன் மிகுதித் தொகையான ரூ. 35,500 இலட்சம் அல்லது ரூபாப் பிணைகளின் மொத்தப் பெறுமதியில் 34 சதவீதம் அதே முதிர்ச்சிக் காலத்திற்கு ஆண்டிற்கு 14 சதவீத வட்டியில் வழங்கப்பட்டது.


இவ்வாண்டுக் காலத்தில் முப்பத்தியொரு ரூபாக் கடன்கள் முதிர்ச்சியடைந் தமையின் காரணமாக 1985 இல் ரூபாக் கடன்களின் மொத்த மீள் கொடுப் பனவுகள் ரூ. 72,080 இலட்சங்களாக விளங்கின. எனினும் ரூ. 22,950 இலட்சம் கடன் கரைப்பு நிதியங்கள் வசமிருந்த மூலவளங்களிலிருந்து மீளச் செலுத்தப் பட்டது.

1984 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைந்த ரூ. 25,400 இலட்சம் கொண்ட திறைசேரி உண்டியல்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுக் காலத்தில் திறைசேரி உண்டியல்களுக்கெதிரான மொத்தக் கடன்பாடுகள் ரூ. 74,200 இலட்சங்களாக விளங்கின. இதன்படி 1985 இறுதியில் திறைசேரி உண்டியல்கள் மீதான வெளி நின்ற பொறுப்பு 1984 இன் ரூ. 148,600 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 222,800 இலட்சங்களாக விளங்கியது.

அரசிற்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்கள் முன்னைய ஆண்டின் ரூ. 12,490 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 1,750 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. மத்திய வங்கியின் முற்பணங்களின் பேரில் அரசின் மொத்த வெளிநின்ற பொறுப்பு 1980 இன் ரூ. 3,080 இலட்சம் 1983 இன் ரூ. 2,770 இலட்சம் கொண்ட சிறப்புக் கடன்களையும் உள்ளடக்கி 1985 இறுதியில் ரூ. 42,180 இலட்சங்களாகக் காணப்பட்டது. வெளிநின்ற வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகள் 1984 இன் ரூ. 960 இலட்சங்களிலிருந்து 1985 இல் ரூ. 1,190 இலட்சங்களுக்கு அதிகரித்தது. இவ்வாண்டுக் காலத்தில் நிருவாகக் கடன்பாடுகளின் மீள் கொடுப்பனவு ரூ. 80 இலட்சமாக விளங்கியது.

மொத்த வெளிநின்ற படுகடனில் 52 சதவீதத்திற்கு வகை கூறிய வெளி நாட்டுக் கடன்பாட்டுக் கூறு முன்னைய ஆண்டினைவிட 26 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மொத்த வெளிநாட்டுக் கடன்பாட்டில் வர்த்தக நியதிகளில் பெறப்பட்ட கடன்கள் தொடர்பாக வெளிநின்ற பொறுப்புக்கள் ரூ. 82,050 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 11 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. எனினும் வெளிநாட்டுப் படுகடனில் வர்த்தகக் கடன்களின் பங்கு 14 சதவீதத்திலிருந்து 1985 இல் 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## வெளிநாட்டுப் படுகடனின் உள்ளடக்கம்




இலங்கை மத்திய வங்கி

இவ்வாண்டுக் காலத்தில் வெளிநாட்டு மூலங்களின் மூலம் பெறப்பட்ட மொத்தக் கடன்பாடுகள் ரூ. 88,980 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 1 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மொத்த வெளிநாட்டுக் கடன்பாடுகள் மொத்த வரவுசெலவுத் திட்டப் பற்றுக்குறையில் 30 சதவீதத்திற்கு வகை கூறின. ஒப்பிடுகையில் 1984 இல் இது 56 சதவீதமாக இருந்தது. வர்த்தகக் கடன்பாடுகள் வடிவிலான கடன்கள் முன்னைய ஆண்டின் ரூ. 16,240 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 4,760 இலட்சங்களாகக் காணப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் வெளிநாட்டுக் கடன்களின் மீள் கொடுப்பனவுகள் ரூ. 17,890 இலட்சங்களாக விளங்கி 1984 இன் ரூ. 73,730 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் 1985 இல் ரூ. 71,090 இலட்சம் கொண்ட தேறிய கடன்பாடுகளைத் தோற்றுவித்தது.

அரச படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 83,180 இலட்சங்களாக அமைந்து முன்னைய ஆண்டின் 10 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 14 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டி ரூ. 64,770 இலட்சங்களாக விளங்கிய வேளையில் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டி ரூ. 18,410 இலட்சங்களாகக் காணப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் 9 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 12 சதவீதத்தினால் அதிகரித்தவிடத்து வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் 16 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 25 சதவீதத்தால் அதிகரித்தது.

திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 17 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஆண்டின் நடுப்பகுதியில் உயர்ந்த வீத வட்டியில் வெளிநின்ற உண்டியல்களில் பெருமளவு தீர்ப்பனவு செய்யப்பட்டமையே முதன்மைக் காரணமாகும். இதன்படி உள்நாட்டுப் படுகடனின் மீதான மொத்த வட்டியில் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கடப்பாடுகளின் பங்கும் 33 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்கு அதிகரித்தது. மறுபுறத்தில், ரூபாக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் 21 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 9 சதவீதத்தினால் அதிகரித்தன. ரூபாக் கடன்களின் அளவு அதிகரித்தபோதும் இவ்வாண்டுக் காலத்தில் காணப்பட்ட குறைந்த வட்டி வீதங்களின் காரணமாக வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு 1985 இல் மிதமாகவே காணப்பட்டது. எனினும் வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் மாற்றமின்றி ரூ. 30 இலட்சங்களாக இருந்தன.

வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் செயற்றிட்டக் கடன்கள் மீதான ரூ. 6,040 இலட்சத்தினையும் பண்டக் கடன்கள் மீதான ரூ. 5,340 இலட்சத்தினையும் ஏனைய கடன்கள் மீதான ரூ. 7,030 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தன. வெளிநாட்டுக் கடன்பாடுகளில் ஏற்பட்ட கணிசமான

அதிகரிப்பினையும் அதே போன்று வர்த்தக நியதிகளின் மீதான கடன்பாடுகளின் பெரும் விகிதத்தையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கடப்பாடுகள் முன்னைய ஆண்டினைவிட 25 சதவீதத்தினால் அதிகரித்தன. இதனால் வெளிநாட்டுக் கடன்பாடுகள் மீதான வட்டி வர்த்தகக் கடன்பாடுகளின் பேரிலான ரூ. 8,930 இலட்சங்களையும் உள்ளடக்கியிருந்தது. 1984 இல் இது ரூ. 6,790 இலட்சங்களாக இருந்தது. கடந்த அண்மைக் காலத்தில் அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக, நடைமுறைச் செல வினத்தின் விகிதமாக வட்டிக் கொடுப்பனவுகளும் 21 சதவீதத்திலிருந்து 1985 இல் 23 சதவீதத்திற்கு அதிகரித்தன. எனினும் வட்டி/மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் முன்னைய ஆண்டின் மட்டமான 5 சதவீதத்தில் மாற்ற மின்றியிருந்தது.

மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (வட்டியும் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும்) 1985 இல் ரூ. 150,440 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 58 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது. இது கடன் கரைப்பு நிதியத் தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக ரூபாக் கடன்களில் நேரடி மீளக் கொடுப்பனவின் மீதான அதிகரித்த செலவினத்தினால் ஏற்பட்ட விளைவாகும். 1985 இன் அதிகரித்த செலவினத்தினதும் குறைந்த அரசிறைச் சேகரிப்புக்களினதும் விளைவாக அரசின் அரசிறை தொடர்பான மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 25 சதவீதத்திலிருந்து 40 சதவீதத்திற்கு அதிகரித்தது.